
பக்கங்கள் 16 + 06

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## குளவி கொட்டி குடும்பஸ்தர் பலி



(ராமு தனராஜா)

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மில்லபெத்த – பிட்டகொலகம பகுதியில் குளவிக் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 15 செவ்வாய்க்கிழமை 28.05.2024 அதிர்வு 302




# இரண்டு பிரதான தேர்தல்களும் ஈராண்டுகளுக்கு ஒத்திவைப்பு?

## ஐக்கிய தேசியக் கட்சி யோசனை

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

**எதிர்பார்த்தபடி ஜனாதிபதித் தேர்தலையோ, நாடாளுமன்றத் தேர்தலையோ நடத்தாது ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி முன்மொழிந்துள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவால் இன்று சிறிகொத்த கட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை இரண்டு வருடங்கள் நீடித்து நாட்டை மீட்பதே இந்த நேரத்தில் சிறந்த தெரிவாகும் என்று பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுடனான ஒப்பந்தம் காரணமாக இது அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இது இன்றியமையாத விடயம் என்றும், அதற்காகச் சர்வஜன வாக் 04▶

# அருட்சகோதரியின் தாக்குதல் அச்சத்தால் 11 சிறுமிகள் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். ஊர்காவற்றுறையில் சிறுவர் இல்லத்தில் கிறிஸ்தவ அருட்சகோதரியின் தாக்குதல் அச்சத்தால் 11 சிறுமிகள் தப்பிச் சென்று பொலிஸ் நிலையத்தில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் இயங்கும் ஒரு சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள சிறுமிகள் மீது இல்லத்தின் மேற்பார்வையாளரான அருட்சகோதரி ஒருவர் நீண்டகாலமாகத் தொடர் தாக்குதலை மேற்கொண்டு வந்துள்ளார். இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டவர் நேற்றுக் காலையும் சிறுமிகள் மீது அகப்பைக் காம்பு கொண்டு தாக்குதல் மேற்கொண்டதோடு, “இப்ப பாடசாலைக்குச் செல்லுங்கள், மாலை வாருங்கள், மிச்சம் தருகின்றேன்” – என்று 04▶




# வடக்கில் ரணில் பங்கேற்ற அரச நிகழ்வு மேடைகளில் கூட்டமைப்பு ஏறியது ஏன்?

## யாழில் சுமந்திரன் விளக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

“அரச நிகழ்வுகளில் நாம் பங்கெடுக்காமல் இருப்பது என்பது எங்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுடைய ஆணையை மீறுவதாகக் கூட இருக்கலாம். அதனால் வடக்குக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்தபோது அவர் கலந்து கொண்டிருந்த அரச நிகழ்வு மேடைகளில் ஏறினோம்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது மேற்படி விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு விஜயம் செய்தபோது அவர் கலந்துகொண்டிருந்த மேடைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தமை சம்பந்தமாகப் பலதரப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இங்கு ஜனாதிபதி பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார். அதிலே சில நிகழ்வுகள் அரச நிகழ்வுகள்.

அரச நிகழ்வுகளிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வது முக்கியமான ஒரு விடயம். ஆனாலும், நாங்கள் அந்த நிகழ்வுகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று ஒரு முடிவெடுத்து தீர்மானித்தால் அதனை நாங்கள் புறக்கணிக்கலாம். எனினும், அதற்கான காரணம் இருக்க வேண்டும்.

ஆனால், புறக்கணிப்பு எனத் தீர்மானிக்காமல் வெறுமனே அந்த நிகழ்வுகளில் பங்கெடுக்காமல் இருப்பது என்பது எங்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுடைய ஆணையை மீறுவதாகக் கூட இருக்கலாம்.

இதில் விசேடமாக யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுகள் வைத்தியசாலைகள் சம்பந்தமான நிகழ்வுகள்தான்.

அவை வடக்கு மாகாண சபை இருந்த காலத்திலே மாகாண சபையின் சுகாதார அமைச்சராக இருந்த சத்தியலிங்கத்தின் முயற்சியின் பலனாக முன்னெடுக்கப் பட்டவைதான். அவை இப்போதுதான் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதிலே முனைப்பாகச் செயற்பட்டவர்கள் நாங்கள்தான்.

அதனை ஜனாதிபதி இப்போது திறந்து வைத்திருந்தாலும் கூட அதிலே மக்கள் சார்பாக நாங்கள் செய்த பங்களிப்பு பதிவு செய்யப்பட வேண்டும். ஆகையினால் அந்த நிகழ்வுகளிலே நாங்கள் கலந்துகொள்வது பொருத்தமான ஒரு விடயம்.

இதிலே மிகவும் சந்தோஷத்துக்குரிய ஒரு விடயம் என்னவெனில் நேற்று (நேற்றுமுன்தினம்) வவுனியாவிலே நடைபெற்ற இப்படியான ஒரு நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் மாகாண அமைச்சர் சத்தியலிங்கம் இதற்குப் பொறுப்பானவர் என மேடையிலையே அவர் கௌரவிக்கப்பட்டிருந்தார். இதனை அரசே மேடையிலே கண்டு கொண்டது.

ஆகவே, வடக்கு மாகாண சபை குறித்து பலருக்கு பலவிதமான கருத்துக்கள் இருந்தாலும் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுப் பொறுப்புகளில் இருந்த எமது கட்சியினர் அந்தந்தத் துறைகளிலே மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்திருந்தார்கள். அப்படியான செயற்பாட்டு நிகழ்வுகளிலே மக்கள் பிரதிநிதிகளாக நாம் கலந்து கொண்டமை நல்ல விடயமாகத்தான் பார்க்கின்றேன்.

அதேவேளை, வடக்கில் மக்களுக்குக் காணி உரிமைப் பத்திரங்களை ஜனா திபதி வழங்கி வைத்துள்ளார். இதிலே பலருக்கு விளக்கம் குறைவாக இருக் கின்றது.

இவற்றில் அனேகமானவை மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வந்த காணிகள். இப்போதும் அதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மேலும், சில காணிகள் பொமிற் காணிகளாக இருந் திருக்கின்றன. அதற்கான உரிமமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் சிலருக்கு அரசால் காணி உரிமம் கொடுக்கப்பட்டிருந்தாலும் சில மட்டுப்படுத்தல்கள் அதிலே இருந்தன. அந்த மட்டுப்படுத்தல்கள் எல்லாத்தையும் நீக்கி முழு உரித்தும் அவர்கள் கையிலே கொடுக்கப்பட்டுள்ளது.

இது எமது மக்களின் காணிகள். அவை அந்த மக்களிடமே போய்ச் சேருகின்ற விடயம். ஆகவே, இதிலே மக்கள் பிரதிநிதிகளாக நாங்கள் கலந்துகொள் வதும் காணி உரிமங்களை அவர்களிடம் வழங்குகின்றபோது அவர்கள் அதைப் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு வழங்கும் வகையில் அறிவுரை சொல்வதும் எங்களுடைய கடமையாக இருக்கின்றது.

ஏனென்றால் இந்தக் காண உரிமைகளை முழுமையாக மக்களிடத்தில் கையளித்து விட்டால் அவர்கள் அதைத்

(03ஆம் பக்கம் பார்க்க)





# இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே!

## அங்கீகரிக்கக் கோரி பிரிட்டன் பிரதமருக்கு இருவேறு மனுக்கள்

இலங்கையில் நடந்த ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் உச்சமான மே 18 அவலத்தின் 15 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின்போது, பிரிட்டன் பிரதமரிடன் இரு அமைப்புக்களால் இருவேறு மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முதல் மனு, இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்டது மற்றும் நடாத்தப்பட்டுக் கொண்டிருப்பது திட்டமிட்ட இனப்படுகொலையே என்பதைப் பிரிட்டன் அரசு உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையம் என்ற அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனைச் செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்டவர்களுமான மனுமயூரன் கிருபானந்தா மனுநீதி, சசிகரன் செல்வசுந்தரம், கஜானன் சுந்தரலிங்கம், றோய் ஜக்சன் ஜேசுதாசன், துஷானி இராஜவரோதயம் மற்றும் சுபமகிஷா வரதராஜா ஆகியோர் சமர்ப்பித்தனர்.

இந்த மனுவில், கனடாவில் இடம்பெற்றதைப் போல், பிரிட்டன் நாடாளுமன்றமும் இலங்கையில் இழைக்கப்படுவது தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்வதற்குத் தீர்ப்பாயமொன்று அவசியமெனில், அதனை உள்ளக ரீதியிலோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ நிறுவ வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இரண்டாவது மனுவானது, இலங்கையில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் புலம்பெயர் உறவுகளின் சங்கத்தினரால் கையளிக்கப்பட்டது. இம் மனுவிலும் இனப்படுகொலை என்பதை அங்கீகரிக்கும்படியும், இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் இலங்கை ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளைப் பின்பற்றி பிரிட்டன் அரசு தடைவிதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மனுவை இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரிட்டன் வாழ் உறவுகள் கையளித்தனர். குறிப்பாக, இலங்கையின் இறுதிப் போரின் நிறையில் வெள்ளைக்கொடியுடன் வண.பிதா.பிரான்சிஸ் தலைமையில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களான தமிழீழ காவல்துறையின் இரண்டாவது பொறுப்பாளரான மாதவன் மாஸ்டரின் மகனான கோகுலன் சிவசிதம்பரம், தளபதி ஜெரியின் மகனான புகழினியன் விக்டர் விமலசிங்கம், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பராவின் பேரனாகிய ஈஸ்வரன் ஜெனார்த்தனன், கேணல் கண்ணனின் மகனான உதயராஜா பவசுதன், போராளியான யூக்சின் வினோஜினி அந்தோனிப்பிள்ளையின் சகோதரியான மேரி யூலியானா சசிகரன் மற்றும் அஹிதர் பாலசுப்பிரமணியத்தின் தம்பியான அனுஷன் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நேரடியாகப் பிரதமர் அலுவலகத்தில் கையளித்தனர்.

## வடக்கில் ரணில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ளலாம்.

அவ்வாறு மக்களிடத்தே இந்தப் பொறுப்பைக் கொடுக்கின்றபோது அந்தப் பொறுப்பை அவர்கள் சரியான முறையில் நிர்வகிக்க வேண்டும். குறிப்பாக வெளியாட்களுக்கு விற்க வேண்டாம். ஈடு வைத்து இழந்து விட வேண்டாம். வெளிநாட்டு நிறுவனங்கள் வந்து இதனைக் கொல்வனவு செய்வதை அனுமதிக்க வேண்டாம் போன்ற கருத்துக்களை மக்களிடத்தே சொல்ல வேண்டிய தேவை நிச்சயமாக இருந்தது.

இதற்கமைய அந்தக் கருத்துக்கள் எமது மக்களிடத்தே தற்போது சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, எங்களுடைய நிலத்தின் முழுமையான உரித்தை எங்கள் மக்களுக்கே கொடுக்கின்ற நிகழ்வுகளில் நாங்கள் பங்கெடுப்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் வரவிருக்கின்ற இந்தச் சமயத்திலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமும் அதிலே ஒரு வேட்பாளராக கலந்துகொள்வார் என்று பலர் நம்பியிருக்கின்ற வேளையிலே இந்தக் கூட்டங்களிலே பங்குபற்றிய வேறு சிலர் இந்தக் கூட்டங்களைத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் போல நடத்தியிருந்தார்கள்.

இதனை யாழ்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே நான் நேரடியாகவே சொல்லியிருந்தேன். அதாவது இது ஒரு அரச நிகழ்வு என்றும், இதில் தேர்தல் பரப்புரை போன்ற சாயம் தென் படுகின்றது என்றும், ஆனால் இது தேர்தல் பரப்புரை அல்ல என்றும் சொல்லியிருந்தேன்.

இறுதியாக கிளிநொச்சியில் நான் பேசிய போதும் இது தேர்தல் பரப்புரைக் கூட்டம் போன்றே இருக்கின்றது என்றும், அப்படி இது இருக்கக்கூடாது என்றும் கூறியிருந்தேன்.

இப்படி இதை உபயோகிக்கின்றவர்கள் ஜனாதிபதியையும் அவமதிக்கின்றார்கள் என்ற கருத்தையும் சொல்லியிருந்தேன்.

அது மட்டுமல்லாமல் அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக விசேடமாக சுகாதாரத்துறை, கல்வி, காணி அதிகாரம் போன்ற விடயங்கள் சம்பந்தமாகவும், எங்கள் மக்களுடைய எதிர்பார்ப்பு, அரசியல் அபிலாஷைகள், எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு மற்றும் தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப் பாடுகள் இந்தக் கூட்டங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

ஏனென்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படும் எனவும், கூடிய அதிகாரப் பகிர்வோடு இது செய்யப்படும் என்றும் சொல்லுகிற நிலையில் அவரிடத்தே நாம் இவற்றையெல்லாம் இங்கு வைத்து சொல்லியிருக்கின்றோம்.

மத்திய அரசு இப்போது செய்கின்ற இந்த விடயங்கள் அனைத்தும் மாகாண சபைக்குரிய விடயங்கள். மாகாணத்துக்குரிய அதிகாரங்களை மாகாணங்கள் முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று சொல்லுகின்ற நீங்கள் இந்த விடயங்களிலே மத்திய அரசின் செயற்பாட்டைத் தவிர்த்து மாகாண அரசு அதனைச் செய்வதை உறுதி செய்ய வேண்டுமென்ற கருத்தை ஒவ்வொரு மேடைகளிலும் நான் சொல்லியிருக்கின்றேன்.” – என்றார்.






# மதுபானசாலை அனுமதியை நிறுத்தக் கோரி போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் மதுபானசாலை அனுமதியை நிறுத்தக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரபல்யமான பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பனவற்றுக்கு அண்மையாக மதுபானசாலை சட்ட விரோதமாக இயங்கி வருகின்றது எனவும், இதனால் பல சமூகப் புரள்வான நடவடிக்கைகள் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நடைபெற்று நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன எனவும், இதனால் தீவக மக்களின் நலன் கருதி மதுபானசாலைக்கான அனுமதியை வழங்கக்கூடாது எனவும் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



ஊர்காவற்றுறை சிவில் சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில், ஊர்காவற்றுறை சிறுவில் வீதியில் சட்ட விரோதமாக இயங்கி வருகின்ற மதுபானசாலையின் அனுமதியை நிறுத்தக் கோரி ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலகத்துக்குள் பதாகைகள் தாங்கியவாறு உள்நுழைந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவியிடம் மகஜரையும் கையளித்தனர்

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரண்டு...

கெடுப்பை நடத்துவது மிகவும் ஜனநாயகமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தை நீடிக்க ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டையும் இரண்டு வருடங்கள் ஒத்திவைக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், அது ஜனநாயகத்துக்கு எதிரானது என எவரேனும் கூறினால் அது தவறு என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளும் இதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஐக்கிய தேசியக் கட்சியின் சமீபத்திய அறிக்கை கடந்த வார இறுதி அறிக்கைகளிலிருந்து மிகவும் வித்தியாசமாகக் காணப்படுகின்றது.

நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி – ஒக்டோபர் 18 ஆம் திகதிக்கிடையில் நடைபெறும் எனவும், அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெறும் எனவும் அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"நான் பொறுப்புடன் கூறுகிறேன், உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுக் காட்டுமாறு எதிர்க்கட்சிகளுக்கு சவாலும் விடுகிறேன்" – என்று அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா கூறியதை தற்போது நினைவுகூரலாம்.

எவ்வாறாயினும், ரணிலின் பதவிக் காலத்தை நீடிக்க சட்டத்தில் இடமுண்டா எனப் பல கதைகள் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றன.

## அருட்சகோதரியின்...

அச்சுறுத்தியுள்ளார்.

அருட்சகோதரியின் இந்த அச்சுறுத்தல் காரணமாக பாடசாலை நிறைவுற்றதும் கூடிப் பேசிய 12 சிறுமிகள், சிறுவர் இல்லத்துக்குச் செல்லாது ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைய முடிவெடுத்தனர். எனினும், அவர்களில் ஒருவர் தனது வீட்டுக்குச் செல்ல ஏனைய 11 சிறுமிகளும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தனர்.

இவ்வாறு தஞ்சமடைந்த 11 சிறுமிகளையும் நேற்று மாலை பொலிஸார் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்த்து இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது 11 சிறுமிகள் மீதும் தாக்குதல் நடத்திய அடையாளங்கள் காணப்பட்டுள்ளன. 11 சிறுமிகளுக்கும் இடது பக்கத்திலேயே தழும்புகள் காணப்படுவதால் வலது கைப் பழக்கம் உள்ள ஒருவரேதாக்குதலைமேற்கொண்டுள்ளார் என்று கருதப்படுகின்றது.

சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின்போது, சிறுவர் இல்ல மேற்பார்வையாளரான அருட்சகோதரி நீண்ட காலமாகத் தங்களைத் தாக்குகின்றார் எனவும், சைவச் சிறுமிகளையும் கிறிஸ்தவ ஆராதனையை மனப்பாடம் செய்து கூறுமாறு வற்புறுத்தி அவர் தாக்குகின்றார் எனவும், கிறஸ்தவ சிறுமிகளைக் கிறிஸ்தவ ஆராதனையை ஆங்கிலத்தில் மனப்பாடம் செய்து கூறுமாறு கோரி தாக்குகின்றார் எனவும், தரக் குறைவான வசனங்களால் சிறுமிகளை அருட்சகோதரி திட்டுகின்றார் எனவும் பாதிக்கப்பட்ட சிறுமிகள் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாகச் சிறுவர் நன்னடத்தை திணைக்களம், சிறுவர் அபிவிருத்தித் திணைக்களம் என்பனவும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

## குளவி...

கொட்டுக்கு இலக்காகிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது தோட்டத்தில் மிளகு பறிப்பதற்காக மரம் ஒன்றில் ஏறி மிளகு பறித்துக் கொண்டிருந்த மேற்படி குடும்பஸ்தர், குறித்த மிளகு கொடிக்குள் இருந்த குளவிக்கூடு கலைந்து குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் ஹொப்டன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

மில்லபெத்த பிட்டகொலகம பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பசறை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மரணித்த நபரின் சடலம் லுணுகலை ஹொப்டன் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.





# நுவரெலியாவில் பாரிய அனர்த்தம்!

## உயிராபத்துக்கள் இல்லை; மின் விநியோகம் தடை

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகலை கற்குழி பகுதியில் பாரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்து அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இன்று காலை 9.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சரிந்து வீழ்ந்த பாரிய மரம் அப்பகுதியில் செல்லும் அதி உயர் மின்சார கம்பியின் மேல் வீழ்ந்துள்ளது.

அதேநேரத்தில் சரிந்து வீழ்ந்த மரத்தின் பாரிய கிளை 33 ஆயிரம் மெகாவோல்ட் கொண்ட மின் கம்பியின் தனி வீடு ஒன்றின் கூரையில் வீழ்ந்து வீட்டின் பகுதி தீப்பற்றியுள்ளது.

இந்த அனர்த்தத்தால் அந்த வீட்டில் காணப்பட்ட மின் உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதுடன் அயலவர்களின் உதவியால் தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த வீட்டில் மூன்று சிறார்கள் உட்பட அறுவர் வசித்து வந்துள்ள நிலையில் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் சிறார்கள் பாடசாலைக்குச் சென்றிருந்தார்கள் எனவும், வீட்டில் யாரும் இருந்திருக்கவில்லை என்பதால் உயிராபத்துக்கள் ஏதும் இடம்பெறவில்லை எனவும் வீட்டின் உரிமையாளர் பி.செல்வகுமார் தெரிவித்தார்.

அனர்த்தம் இடம்பெற்ற சில மணி நேரத்தில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த இலங்கை மின்சார சபை ஊழியர்கள் பிரதேசத்துக்கான பிரதான மின் விநியோகத்தைத் தடை செய்து மின் கம்பிகள், வயர்களை அகற்றும் பணியை முன்னெடுத்தனர்.

நுவரெலியா இடர் முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகளும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து நிலைமையை ஆராய்ந்து விசாரணைகளை நடத்தினர்.

மேலும் சம்பவத்தில் பாதிப்புக்குள்ளான வீட்டில் நிர்க்கதிக்குள்ளானவர்கள் தற்காலிகமாக உறவினர் வீட்டில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேநேரத்தில் சரிந்து வீழ்ந்த பாரிய மரத்தை வெட்டி அகற்றும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சம்பவத்தால் நிர்க்கதியான வீட்டின் உரிமையாளர் பி.செல்வகுமார் தாம் வாழ்வதற்கு தற்போதைக்கு வீடு இல்லாத நிலையில் கூடிய சீக்கிரம் தனது வீட்டைப் புனர் நிர்மாணம் செய்து வாழ வைக்க அரசு நடவடிக்கை எடுப்பதுடன் சம்பவத்தால் இழந்த வீட்டு உபகரணங்களைப் பெற்று கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஐ.தே.கவின் பகல் கனவு

'கோணிப் பைக்குள் பதுங்கிக் கிடந்த பூனை கடைசியில் வெளியே தலை காட்டுகின்றது' என்ற கருத்துப் பட ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நீண்ட காலம் மறைக்கப்பட்ட ஒன்று - எதிர்பாக்கப்பட்ட ஒன்று - மெல்லத் தலை காட்டுவதைத்தான் இப்படிக் கூறுவர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் அவரது தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியினதும் பதவி ஆசை பற்றிய சதித்திட்டம் இப்போது மெல்ல வெளிப்படும் போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

தேர்தல் என்றாலே 'தொடை நடுங்கி' ரணில் விக்கிரமசிங்க என்ற ஒரு பெயர் உண்டு. மாகாண சபை தேர்தல் முறைமைக்கு ஆப்பு வைத்து, ஆறு ஆண்டுகளாக அதனை முடக்கி வைத்திருப்பதன் பிரதான சூத்திரதாரி அவர்தான். கடந்த ஆண்டு நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, பகுதியளவு வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்ட பின்னர், குறுக்கு வழியால் அந்தத் தேர்தலையும் தடுத்து மறித்தவர் அவர்தான் என்பதும் பரகசியம்.

இப்போதும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் மீளப் போட்டியிடுகின்றாரா என்பது தொடர்பில் ஓர் அமானுஷ்ய அமைதி பேணி வருகின்றார் அவர்.

அரசமைப்பின்படி, அடுத்த 175 நாள்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விட வேண்டும். தேர்தல் நடக்கும் என்று கூறும் ரணில் விக்கிரமசிங்க, தாம் அதில் போட்டியிடுவாரா, இல்லையா என்பதை கூறாமல் - வெளிப்படுத்தாமல் - இழுத்தடித்து வருகின்றார்.

இப்படி அவர் இழுத்தடித்து வருகின்றமையால் தேர்தலை நடத்தும் எண்ணம் அவருக்கு இல்லை என்று பல தரப்புக்களும் ஏற்கனவே சந்தேகம் கிளப்பி வருகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான், அவரின் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப்போட்டிருக்கின்றார்.

அது, தேர்தல் அணுகுமுறைப் போக்குத் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க இதுவரை வெளிப்படுத்தி வந்த கபடத்தனமான - நரித் தந்திரமான - செயற்பாடுகள் தொடர்பான சந்தேகங்களை உறுதிப்படுத்துவது போல அமைந்திருக்கின்றது.

ஜனாதிபதியினதும் மற்றும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்க பொது வாக்கெடுப்பு நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி இன்று பரிந்துரைத்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவினால் இன்று இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

"நாட்டைக் காப்பாற்றுவதற்கு வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியினதும் மற்றும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பது இந்த நேரத்தில் சிறந்த வழி. பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பிற நன்கொடையாளர்களுடன் அரசாங்கம் ஒப்பந்தங்களை எட்டியுள்ளது. இந்த இணக்கத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஜனாதிபதியினதும் மற்றும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலங்களை நீடிக்க வேண்டும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது எல்லாவற்றையும் விட முக்கியமானது" என்று ரங்கே பண்டார ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

"ஜனாதிபதியினதும் மற்றும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலங்களை நீடிப்பதற்கான வாக்கெடுப்பை நாங்கள் முன்மொழிகிறோம், ஏனெனில் அதைச் செய்வதற்கான மிகவும் ஜனநாயக வழி இதுதான்" என்று அவர் மேலும் கூறினார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது ஒன்றும் புதிய அதிர்ச்சி அறிவிப்பு அல்ல. தேர்தலை கண்டு அஞ்சும் - அதே நேரம் பதவி ஆசை பிடித்த - ரணில் விக்கிரமசிங்க இப்படித்தான் செய்ய முயல்வார் என்று ஆரம்பத்தில் இருந்தே பல தரப்புக்களும் எதிர்பார்த்தே வந்தன.

இந்த உத்தேச திட்டத்தை 'ரணில் அண்ட் கம்பெனி' முன்னெடுப்பதிலும் இரண்டு பெரும் சிக்கல்கள் - நெருக்கடிகள் - உள்ளன. ஜனாதிபதித் தேர்தலை தள்ளிப் போட முயன்றால் இன்னொரு 'அறகலய' போன்ற - ஆளும் தரப்பு முகம் கொடுக்க முடியாத - மோசமான மக்கள் போராட்டம் வெடிக்கும்.

அடுத்தது - சட்டரீதியான நெருக்கடி. நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடிக்க முடியும். அதற்கு அரசமைப்பில் இடம் உண்டு. ஆனால் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அப்படி நீடிக்க முடியாது. அதை செய்வதாயின் முதலில் அதற்கான அரசமைப்புத் திருத்தம் செய்ய வேண்டும். அத்தகைய அரசமைப்புத் திருத்தத்தை செய்வதற்கே ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி தேவை என்று உயர் நீதிமன்றம் உத்தரவிடும் சாத்தியங்கள் பெரும்பாலும் உண்டு.

இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடிப்பது என்பது சாத்தியமாகாத வெறும் பகல் கனவுதான்...!



# சம்மாந்துறையில் வீடற்றோருக்கு வீடு!

(எம்.எம்.றம்ஸீன்)

பொருளாதார நெருக்கடி காரணமாக வீடுகள் அற்ற நிலையில் வாழும் குடும்பங்களுக்கான வீடுகள் வழங்கும் வேலை திட்டத்தின் ஓர் அங்கமாக அண்மையில் சம்மாந்துறையில் “இப்ராலெப்பை நம்பிக்கை நிதியத்தால்” நிர்மாணிக்கப்பட்ட வீடு திறந்து வைக்கப்பட்டன.

இதன்போது அமைப்பின் குடும்ப அங்கத்தவர் ஏ.ஜே காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைப்பின் தலைவர் ஜனாப் அப்துல் ஹமீட், சம்மாந்துறை மஜ்லிஸ் ராவின், தவிசாளர் டாக்டர் ரஷீட், சகாத் சபையின் தலைவர் மற்றும் பள்ளிவாசல் உறுப்பினர்கள் உலமாக்கள் ஜனாப் யாசின், டில்ஷாட், “நாஸிம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் வீடு அற்ற நிலையில் வாழும் குடும்பங்களுக்குத் தேவைகளை படிப்படியாக நிவர்த்தி செய்வது இந்த அமைப்பின் நோக்கம் என்று அதன் தலைவர் அப்துல் ஹமீட் தெரிவித்தார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# ஆளுமை விருத்திச் செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு இளைஞர்கள் அமைப்பு, றிஸ்லி முஸ்தபா கல்வி அபி விருத்தி அமைப்பின் நிதியுதவியுடன் இணைந்து, இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஆளுமை விருத்தி செயலமர்வை நடத்தின. அத்துடன் இதில் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் கல்முனை வைட் லோட்டஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் தலைவர், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தானீஸ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவரும் மயோன் நிறுவனத்தின் பணிப்பாளருமான றிஸ்லி முஸ்தபா கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை ரோயல் கல்லூரி பணிப்பாளர் ஜாபீர் முஹம்மட், கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் உயர் பீட உறுப்பினர் கே.எல்.ஹில்மி, கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தன்ஸீம் ரஹ்மத்துல்லாஹ், செயலாளர் ஆதிக் மற்றும் உயர் பீட உறுப்பினர் கலந்து கொண்டனர்.







# சம்மாந்துறை பெண்கள் அரபுக் கல்லூரி சுகாதார நிலைமை தொடர்பில் ஆராய்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் ஆலோசனையின் பேரில் சம்மாந்துறை சென்னல் கிராமத்தில் இயங்கும் அல் ஸாலிஹத் பெண்கள் அரபுக் கல்லூரிக்கு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.




240 மாணவிகளுடன் இயங்கும் இந்தக் கல்லூரியில் மாணவிகள் முழு நேரம் தங்கிக் கற்பதற்கு உரிய சகல வசதிகளும் காணப்பட்டன. குறிப்பாக 28 மலகூடங்கள், 24 குழியலறைகள், சமையலறை என்பன மிக நேர்த்தியாக சுத்தமான முறையில் பராமரிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது என்று சுகாதாரக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



# சாய்ந்தமருது பிரதேச பாடசாலைக்கு பின்புறமாக வடிகானில் கழிவு நீர்!

## தொற்றுநோய் பரவும் அபாயம்!!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்துக்குப் பின்புறமாகவுள்ள வடிகானில் பல மாதங்களாக கழிவு நீர் தேங்கியுள்ளதால் தொற்று நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவக்கூடிய ஆபத்தான நிலமை தோன்றியுள்ளது.

இந்த வடிகானுக்கு அருகில் தொழிற் பயிற்சி வள நிலையம், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் காரியாலயம், பொது வாசிகசாலை என்பன அமைந்துள்ளன.

அதனால் இந்த வடிகானோரமாகத் தினசரி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் பயணிக்கின்றனர்.

புற்கள் மற்றும் செடி கொடிகள் பற்றையாக வளர்ந்து விஷ ஜந்துக்கள் குடியிருக்கும் இடமாக மாறியுள்ள இந்தப் பிரதேசத்தில் தேங்கியுள்ள அசுத்தமான நீரில் நுளம்பு குடம்பிகள் பெருகக் கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பாடசாலை சமூகமும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.



# வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோலம்




வடமராட்சி, வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல உற்சவ 1008 சங்காபிசேகம் நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு சுவாமி வீதியுலா வருகைதந்து பூர்வாங்க கிரியைகள் இடம்பெறும்.

தொடர்ந்து விநாயக வழிபாடு, புண்ணிய வாசனம், விசேட திரவிய கோமம், தீபாரதனை, வேததோத்திர திருமுறை பாராயணம், ஆசீர்வாதம், கும்ப பிரதட்சணம் என்பன இடம் பெறும்.

மணவாளக்கோல உற்சவத்தை ஆலய பிரதம குரு சிவஶ்ரீ கு. கோகுலன் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார்.

### அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான

# கவினைத்திறன் தடைகாண் பரீட்சை முறை மாற்றம் செய்யப்பட வேண்டும்

## தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நடைமுறையிலுள்ள வினைத்திறன் தடை காண் பரீட்சை முறை மாற்றப்பட்டுப் பொருத்தமான நடைமுறைசார் வகுப்புகளாக செயல்படுத்த வேண்டும்.

இவ்வாறு தொழில் ரீதியிலான தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

எமது நாட்டில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோஸ்தர்கள் சேவையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் அவர்களுக்குத் தற்போது நடத்தப்படுகின்ற வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையானது தற்போது வியாபாரமாக்கப்பட்டு வகுப்புகளாக மாற்றம் பெற்றுள்ளது.

வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையை இலக்காகக் கொண்டு ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தரிடமிருந்து மணித்தியாலத்திற்கு 500 ரூபா அறவிடப்படுவது ஒரு கவலையான விடயமாகும்.

இதற்கு மேலதிகமாக 'சூம்' ஊடாக நடத்தப்படுகின்ற வகுப்புகளுக்கு 3000 ரூபாவுக்கு மேற்பட்ட கட்டணம் அறவிடப்படுகின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு தடைதாண்டல் பரீட்சை நடத்தப்படுவதால் கிடைக்கப்பெறும் அறிவு ரீதியான மாற்றத்தை விட வகுப்புகளாக மாற்றப்படுவதன் ஊடாக அவர்களின் திறமை மட்டுமல்ல செயல் ரீதியிலான அனுபவத்தையும் வளர்க்க முடியும்.

அத்துடன் வினைத்திறனான சேவையை அவர்கள் துறையின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.– என்றுள்ளது.

தொழில் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஹுசைன் முபாறக் இக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

இதன் பிரதிகள் பிரதம ர், பொதுச் சேவை ஆணைக்குழு, தொழிற்சங்க சம்மேளனம் என்பனவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.






# இப்ராஹிம் ரைசியின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்துள்ளார் ஜீவன்!

**(பொகவந்தலாவ)**

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு நேற்று (27) சென்ற நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்குத் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உயிரிழந்தார். இந்த நிலையிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான், கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்துக்குச் சென்று, தூதுவரைச் சந்தித்து தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்.

விசேட நினைவுக் குறிப்பேட்டில் தனது அனுதாபச் செய்தியையும் பதிவிட்டார்.

ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட பலரின் திடீர் உயிரிழப்பு தொடர்பில் நாம் மிகுந்த மன வேதனையடைந்தோம் என்றும், விசேடமாக இலங்கைக்கும் எம்மோடு தொடர்புடைய பிராந்தியத்துக்கும் அவர்களின் இழப்பு பாரிய இழப்பு என்றும் தெரிவித்தார்.

அத்தோடு ஈரானும் இலங்கையும் நெடுங்காலமாக நட்போடு திகழ்கின்றன. இலங்கையின் அபிவிருத்திக்கு அவர் பல ஒத்துழைப்புகளை நல்கியுள்ளார். விசேடமாக உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டதுக்கு ஈரான் அரசு நிதியுதவி வழங்கியது. இதை நாம் ஒருபோதும் மறந்து விடமாட்டோம் என ஈரான் தூதுவரிடம் தெரிவித்தார்.





# சீரற்ற காலநிலை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

**(மஸ்கெலியா )**

மத்திய மலை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சீரற்ற காலநிலை காரணமாக பெருந் தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை, பண்ணையாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாகப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறது.

அனைத்து நீர் தேக்கங்களதும் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளது.

குறிப்பாக மவுஸ்சாக்கலை, மற்றும் காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது.

மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட அதிகமாக உள்ளதால் ஒரு வான் கதவு திறந்து விட பட்டுள்ளது.

இதனால் மகாவலி கங்கையின் கரையோர மக்களை மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட அரச அதிபர் நந்தன கலபட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இன்னும் 22 அடி நீர் நிரம்பவுள்ளது.

கடும் மழை காரணமாக சாமிமலை ஓயா, மறே ஓயா, சியத்த கங்குல ஓயா, காட் மோர் ஓயா மற்றும் ஓடைகள், ஆறுகள், அருவிகள் நிறைந்து வழிகின்றன.

இந்த நிலையில் இப் பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.



### சந்நிதியான் ஆச்சிரமத்தால்

# கதிர்காம பாதயாத்திரை செல்வோருக்கு குச்சவெளி ஆலயத்தில் வைத்து உதவி

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிமரத்தால் பாரம்பரியமாக சந்நிதி முருகன் ஆலயத்தில் இருந்து கதிர்காம கந்தன் ஆலயம்வரை பாதயாத்திரை செல்கின்ற யாத்திரிகர்களுக்கு 4 ஆம் கட்டமாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை குச்சவெளி கிராமத்தில் அமைந்துள்ள தான்தோன்றி சித்தி விநாயகர் ஆலயத்தில் வைத்து மருத்துவப் பொருள்கள் மற்றும் பொருள்கள் நேற்று திங்கட்கிழமை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கியுள்ளார்.

அதனை தொடர்ந்து திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைப்பதற்காக ரூபாய் 2 லட்சம் ரூபா நிதி உதவியை 2 ஆம் கட்டமாக பாடசாலை முதல்வரிடம் வழங்கினார்.








# சந்நிதி - கதிர்காம பாதயாத்திரை குழுவினர் 30 இல் திருகோணமலையைச் சென்றடைவர்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நதி – கதிர்காம ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் நாளை மறுதினம் திருகோணமலையைச் சென்றடையவுள்ளனர்.

நாளை (29) புதன்கிழமை கோபாலபுரத்தில் தரித்து நிலாவெளியில் தங்குவார்கள். அங்கு கோபாலபுரத்தைச் சேர்ந்த சுவிட்சர்லாந்தில் வாழும் ஆசிரியை திருமதி விஜயகுமாரி விக்னேஸ்வரன் அனுசரணை வழங்கவுள்ளார்.

நாளை மறுதினம் (30) திருகோணமலை நகரை வந்தடைவார்கள்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை இன்று 18 ஆவது தினமாகப் பயணிக்கின்றனர்.

கதிர்காம பாதயாத்திரை பேரவையின் தலைவர் ஜெயாவேல்சாமி தலைமையில் இந்த குழுவினர் பயணிக்கின்றனர்.

மொத்தமாக 124 அடியார்கள் இந்த பாதயாத்திரை குழுவில் இடம் பெற்றுள்ளனர்.



# காரைதீவு கண்ணகை அம்மன் திருக்குளிர்த்தி எட்டாம் சடங்கு!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் திருக்குளிர்த்தி எட்டாம் சடங்கு நிகழ்வில் நேற்று (27) திங்கட்கிழமை இடம்பெற்றது.

நேற்று மாலை பல்லாயிரக் கணக்கான பக்த அடியார்கள் பொங்கல் பொங்கி அம்மனுக்கு படைத்துப் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.










# உலர் உணவுப் பொதிகள் கண்டி மக்களுக்கு வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கண்டி மாவட்டத்திலுள்ள குலுகம்மன பிரதேசத்தில் பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்ரமான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் முஸ்லிம்எகல்மென் அனுசரணையில் ஸ்ரீலங்கா அஸ்ஸா பௌண்டேசன் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. இன, மத பாகுபாடுகள் இன்றி இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.







# கெஜ்ரிவாலுக்கு பிணை நீடிக்க இந்திய உச்ச நீதிமன்று மறுப்பு



புதுடெல்லி,மே27

மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டி இருப்பதால், இடைக்காலப் பிணையை நீடிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் கெஜ்ரிவால் மனுத் தாக்கல் செய்திருந்தார். அதை நீதிமன்றம் நிராகரித்து விட்டது

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டெல்லி முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த மார்ச் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். கடந்த ஏப்ரல் முதலாம் திகதி டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டார்.

நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக, ஜூன் முதலாம் திகதி வரை அவருக்கு இடைக்கால பிணைக்கனுமதி அளித்து, கடந்த 10 ஆம் திகதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் ஜூன் 2 ஆம் திகதி சிறைக்குத் திரும்ப வேண்டும் என்றும் கூறியது. அதைத்தொடர்ந்து, அரவிந்த் கெஜ்ரிவால், டெல்லி, உத்தரப்பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் தேர்தல் பிரசாரம் செய்தார்.

இடைக்கால பிணை அனுமதி முடிவடைய இன்னும் 4 நாள்களே உள்ள நிலையில், பிணையை நீடிக்கக்கோரி அரவிந்த் கெஜ்ரிவால் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

"நான் 7 கிலோ உடல் எடை குறைந்து விட்டேன். எனது சர்க்கரை அளவு தொடர்பான 'கீடோன்' அளவு அதிகரித்து விட்டது. அது, கடுமையான நோய்வாய்ப்படுதலுக்கு அறிகுறி ஆகும். எனவே, பெட்-சிடி ஸ்கேன் உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, எனக்கு அளிக்கப்பட்ட இடைக்கால ஜாமீனை மேலும் 7 நாள்களுக்கு நீட்டிக்க வேண்டும். - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், இந்த மனு இன்று உச்சநீதிமன்றத்தில் கோடைகால நீதிபதிகள் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இடைக்கால பிணை நீடிக்க கோரிய கெஜ்ரிவாலின் மனுவை நிராகரித்தனர். மேலும் இந்த வழக்கின் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் நாங்கள் எந்த முடிவும் எடுக்க முடியாது, ஜாமீன் நீட்டிப்பு குறித்து தலைமை நீதிபதிகள் அமர்வு தான் முடிவு செய்வார்கள் என்று தெரிவித்தனர்.

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள விபத்து

கடந்த 19 ஆம் திகதி - அதாவது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மகாராஷ்ட்ரா மாநிலம் புனேவில் உள்ள கல்யாண் நகர் பகுதியில் விலையுயர்ந்த Porsche ரக கார் அதிவேகமாக வந்துள்ளது. காரை 12 ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன் இயக்கி வந்துள்ளான். ஒரு கட்டத்தில் கார் கட்டுப்பாட்டை இழக்க, அதிவேகமாக சென்று தனக்கு முன் இருசக்கர வாகனத்தில் பயணித்த ஐ.டி நிறுவன ஊழியர்கள் மேல் மோதியுள்ளது. இதனால் ஐடி ஊழியர்கள் இருவரும் பரிதாபகரமாக உயிரிழந்தனர். சாலையில் இருந்தவர்கள் காரை ஓட்டிய சிறுவனை பிடித்து விசாரித்ததும் அவர் மதுபோதையில் இருந்தது தெரியவந்தது.

சிறுவன் கைது செய்யப்பட்டாலும், '300 வார்த்தைகளில் சாலை விபத்தின் விளைவுகள் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கட்டுரை எழுத வேண்டும்' என்றும், இதேபோன்ற இன்னும் ஒரு சில நிபந்தனைகளும் அச்சிறுவனுக்கு விதிக்கப்பட்டு, கைதான 15 மணி நேரத்திலேயே பிணை வழங்கப்பட்டது.

இந்த விவகாரம் சர்ச்சை ஆனதும் வழங்கப்பட்ட பிணை ரத்து செய்யப்பட்டு, கைதான சிறுவன் சிறார் இல்லத்தில் அடைக்கப்பட்டான். முன்னதாகவே, சிறுவனுக்கு ஆதரவாக பொலிஸ் செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது., விபத்து நடந்து 8 மணி நேரம் கழித்துதான் சிறுவனுக்கு பரிசோதனை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. சிறுவனுக்கு ஆதரவாக செயல்பட்ட விவகாரத்தில் எரவாடா பொலிஸ் நிலையத்தின் இன்ஸ்பெக்டரும், மற்றொரு அதிகாரியும் பணியிடை



நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளையில் சிறுவனின் தந்தை, பார் உரிமையாளர்கள், பார் ஊழியர்கள் போன்றோர் மீதும் வழக்கு பதிவு செய்து பொலிஸார் கைது செய்தனர். இந்த சூழலில்தான் "என் மகன் காரை ஓட்டவில்லை, காரை ஓட்டியது ஓட்டுநர்" என்ற குண்டைத் தூக்கிப் போட்டார் சிறுவனின் தந்தை. அதன்பேரில் விசாரணைக்காக குடும்ப ஓட்டுநரும் சிறுவனின் தாத்தாவும் பொலிஸால் அழைக்கப்பட்டனர். அப்போதுதான் மேலும் அதிர்ச்சிகர விஷயங்கள் அம்பலமாகின.

"காரை நான் ஓட்டவில்லை. என்னை மிரட்டி, பணம் கொடுத்து குற்றத்தை நான் செய்ததாக, சிறுவனின் தாத்தாவும் தந்தையும் ஒப்புக் கொள்ள வைத்தனர்" என வாக்குமூலம் கொடுத்தார் ஓட்டுநர். இதன்பின்னர் தாத்தாவும், ஓட்டுநரை தவறான முறையில் சிறையில் அடைத்ததாக, 25 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் கைது செய்யப்பட்டார். அவரை மே 28 ஆம் தேதி வரை பொலிஸ் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் மேலும் ஒரு அதிர்ச்சிகர தகவல் வெளியாகியுள்ளது. சிறுவனிடம் இருந்து பெறப்பட்ட ரத்த பரிசோதனை முடிவுகளை இரு மருத்துவர்கள் திரித்து கூற முயற்சித்திருப்பது தெரியவந்துள்ளது. சிறுவனது ரத்தமாதிரிகள் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டு வேறொரு நபரது ரத்த மாதிரிகளை மாற்றியமை தெரியவந்தது.

இதன்பேரில் இரு மருத்துவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களின் செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இதில் பொலிஸ் துறை நல்வாய்ப்பாக ரத்த மாதிரிகளை இரு வெவ்வேறு இடங்களில் பரிசோதனைக்காக கொடுத்திருந்துள்ளனர். அதனால் வேறொரு இடத்தில் கொடுக்கப்பட்டிருந்த பரிசோதனையின் முடிவுகளே உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

இதற்கிடையே எர்வாடா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிறுவனது தந்தை விஷால் அகர்வாலை, டிரைவரை கடத்திய வழக்கு தொடர்பாக காவலில் எடுத்து விசாரிக்க புனே நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

விபத்தில் உயிரை பறிகொடுத்தவர்களது உறவினர்கள் நீதிகேட்டு போராடி வருகின்றனர். விசாரணையை தங்களது மாநிலமான மத்தியப் பிரதேசத்துக்கு மாற்ற வேண்டுமெனவும், உச்சநீதிமன்றம் இதை கண்காணிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

குற்றம் செய்தவரை தப்பிக்க வைக்க அவரது குடும்பத்தினர் தீவிரமாக செயல்படுவதும், அதற்கு சில பொலிஸாரும் மருத்துவர்களுமே உடந்தையாக இருந்ததும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.



# அமெரிக்காவில் மூன்று மாகாணங்களை புயல் பந்தாடியது; 19 பேர் வரையில் பலி

## 100 பேர் படுகாயம்; 5 லட்சம் பேர் இருளில்

வொஷிங்டன்,மே28

அமெரிக்காவைப் பந்தாடிய புயலுக்கு குழந்தைகள் உள்பட 19 பேர் பலியாகினர். 100 பேர் படுகாயம் அடைந்தனர். மேலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 5 லட்சம் பேர் இருள் மற்றும் குளிரில் மூழ்கி தவிக்கும் நிலை ஏற்பட்டது.

அமெரிக்காவின் மத்திய பகுதியில் சக்தி வாய்ந்த புயல் தாக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி டெக்சாஸ், ஓக்லஹோமா, ஆர்கன்சாஸ் ஆகிய மாகாணங்களைப் புயல் பந்தாடியது.

அப்போது வெளியில் நின்று கொண்டிருந்த பல கார்களை புயல் கவிழ்த்துப் போட்டது. மேலும் அங்குள்ள ஏராளமான வீடுகளும் சேதம் அடைந்தன. இந்தக் கட்டட இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர். இதனையடுத்து அங்கு விரைந்த மீட்பு படையினர் மீட்கும் பணியில் இறங்கினர். அப்போது கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் பச்சிளம் குழந்தைகள் உள்பட 19 பேர் பரிதாபமாக உயிரி ழந்தனர். படுகாயம் அடைந்த நூறுக்கும் மேற்பட்டோருக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.மேலும் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. அவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே புயல் காரணமாக அங்கு ஏராளமான மரங்கள், மின்கம் பங்களும் முறிந்து விழுந்தன. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் சுமார் 5 லட்சம் பேர் இருளில் மூழ்கி தவித்தனர். அங்கு இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியது.

# இஸ்ரேல் தாக்குதலில் 45 பேர் பலி; ஐ.நா. செயலாளர் கடும் கண்டனம்!

ஜெருசலேம்,மே28

ரபா நகரில் அமைந்துள்ள தற்காலிக முகாம்கள் மீது நேற்று முன்தினம் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. 45 பொதுமக்கள் பலியாகக் காரணமான இந்தத் தாக்குதலுக்குக் கடுமையான கண்டனத்தை ஐ.நா பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-காசா இடையே கடந்த அக்டோபர் 7 ஆம் திகதி போர் தொடங்கியது. 7 மாதங்களுக்கும் மேலாக இந்த போர் நடைபெற்று வருகிறது. இந்த போரை நிறுத்தும்படி உலக நாடுகள் பலவும் வலியுறுத்தி வருகின்றன. எனினும் போர் முடிவுக்கு வந்தபாடில்லை. இதற்கிடையே கடந்த மாதம் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் உள்பட பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனையடுத்து காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் மேலும் தீவிரப்படுத்தியது.

அதன் ஒருபகுதியாக ரபா நகரை முற்றுகையிட்ட இஸ்ரேல் இராணுவம் அங்கு பதுங்கி இருக்கும் ஹமாஸ் அமைப்பினர் முழுவதும் அழிக்கப்படும் வரை தாக்குதல் தொடரும் என அறிவித்தது.அதன்படி காசாவின் ரபா நகரில் இஸ்ரேல் ராணுவம் நேற்று சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 23 பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர் என்வும்,



249 பேர் காயமடைந்ததனர் எனவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டதற்கு கடுமையான கண்டனத்தை ஐ.நா பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது:- "இந்த கொடூர மோதலில் இருந்து தங்களை காத்துக் கொள்ளும் வகை யில் தஞ்சம் புகுந்த அப்பாவி மக்களின் உயிரை பலி வாங்கிய இஸ்ரேலின் இந்த தாக்குதல் நடவடிக்கையை நான் கடுமையாக கண்டிக்கிறேன். காசாவில் பாதுகாப்பான இடம் ஏதும் இல்லை. இந்தக் கொடூரம் நிறுத்தப்பட வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் 06

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 28/05/2024

## மொன்றியால் பகுதியில் இடி மின்னல் எச்சரிக்கை

கனடாவின் மொன்றியாலில் இடி மின்னல் தாக்கம் குறித்து கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பாக பகுதியில்

C2




# வாகனங்களைத் திருடி வெளிநாட்டில் விற்கும் கும்பல் மடக்கப்பட்டது

- பீல் பிராந்தியத்தில் 16 பேர் கைது
- மேலும் 10 பேருக்குப் பிடியாணை
- மொத்தம் 369 வாகனங்கள் மீட்பு

**ஒன்ராரியோ, மே 28**

**பீல் பிராந்திய வாகனத் திருட்டு விசாரணையில் 33.2 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.**

**வாகனத் திருட்டு விசாரணை ஒன்றில் பீல் பிராந்திய பொலிஸார் 16 பேரைக் கைது செய்துள்ளனர்.**

இது நன்கு திட்டமிடப்பட்ட குற்றவியல் செயற்பாடு என பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் தவிர, இந்த வாகன திருட்டு விசாரணை தொடர்பாக மேலும் 10 நபர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை மொத்தம் 322 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓடிசி செயல்திட்டம் என பெயரிடப்பட்ட இந்த விசாரணை 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்வதற்காகத் திருடப்பட்ட நூற்றுக் கணக்கான வாகனங்களை தாங்கள் மீட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசாரணையில் தொடர்புடைய 26 சந்தேக நபர்களில், 14 பேர் திருட்டு தொடர்பான குற்றங்களுக்காக ஏற்கனவே கைதானவர்கள் எனவும் தெரிய வருகிறது.

பீல் பிராந்திய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட மிக முக்கியமான வாகனத் திருட்டு விசாரணை இதுவாகும் என பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா கூறியுள்ளார்.

இந்த விசாரணையில் 369 திருடப்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும், பீல் பிராந்தியத்தில் 255 வாகனங்களும், மொன்ரியல் துறைமுகத்தில் 114 வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது.




# பிரின்ஸ் எட்வேர்ட் தீவுகளில் தொடர்ந்தும் வெளிநாட்டுத் தொழிலாளர் உண்ணாவிரதம்

ஒன்ராரியோ, மே 28

பிரின்ஸ் எட்வேர்ட் தீவுகளின் குடியேற்ற மூலோபாயத்தில் மாற்றங்களை எதிர்த்து வெளிநாட்டு தொழிலாளர்கள் நான்காவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாகாண அரசாங்கம் இந்த ஆண்டு நிரந்தர வதிவிடத்திற்காக பரிந்துரைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து வருகிறது, 2,100 இலிருந்து சுமார் 1,600 ஆக – குறிப்பாக விருந்தோம்பல் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பெரிய வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டது.கடந்த ஆண்டில் 800 க்கும் மேற்பட்டோரே பரிந்துரைக்கப்பட்டனர்,

மேலும் இந்த ஆண்டு 200 பேரை மட்டுமே பரிந்துரைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களுக்காகப் பேசியவர்களில் ஒருவரான ஜஸ்பிரீத் சிங் சிவியா, கனடாவில் நிரந்தர வதிவிடத்தை நோக்கிச் செயல்படும் செயல்பாட்டில் ஏற்கனவே உள்ள மக்களுக்கான விதிகளை அரசாங்கம் மாற்றியுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

மாகாணத்தின் செயல்பாடுகளில் மாற்றம் செய்யாவிட்டால் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# பல மாணவர்களுடன் பாலியல் உறவு இணைப் பேராசிரியர் பணி நீக்கம்!

## மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் நடவடிக்கை

கியூபெக், மே 28

மெக்மாஸ்டர் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் ஒருவர் பல மாணவர்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஹெமில்டன் ஆசிரியர் குழுவில் இருந்து ஸ்காட் வோட்டரை 'அதிகாரப் பூர்வமாக நீக்கும்' தனது முடிவை சபை திங்களன்று அறிவித்தது.

'இந்த முடிவு மாணவர்களை உள்ளடக்கிய அவரது நடத்தை மற்றும் நடத்தை முறையின் அடிப்படையிலானதாகும். ஓர் ஆசிரிய உறுப்பினராக அவர் தனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது ஒரு தீவிரமான மற்றும் அடிப்படை நம்பிக்கை மீறலாகும்' என்று மெக்மாஸ்டர் பல்கலைக்கழக தலைவர் டேவிட் ஃபரார் மற்றும் வாரியத் தலைவர் ஜேன் ஆலன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




2017இல் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்களுக்காக 2020இல் வோட்டர் கைது செய்யப்பட்டார்.

புகார் அளித்த ஓர் உளவியல் மாணவர், குற்றவியல் விசாரணையில் வோட்டர் போதையில் இருந்தபோது தனது அனுமதியின்றி தன்னை முத்தமிட்டார் என்று குற்றம் சாட்டினார்.

## மொன்றியால்...

கடுமையான இடி மின்னல் தாக்கம் ஏற்படக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இடி மின்னல் தாக்கத்துடன் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எதிர்வுகூறல்களை வெளியிட்டுள்ளது.

பலத்த காற்று காரணமாக கட்டடங்கள் சேதமடையக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடுமையான மழை பொழிவும் சில இடங்களில் வெள்ளம் ஏற்படும் சாத்தியங்களும் உண்டு எனவும்குறிப்பிடப்படுகின்றது.





# புதிதாக தங்கச் சுரங்கம் ஒன்ராறியோவில் திறப்பு

கனடாவின் ஒன்ராறியோவில் புதிய தங்கச் சுரங்கம் ஒன்று திறக்கப்பட்டுள்ள நிலையில், அது கனடாவின் மிகப்பெரிய சுரங்கம் என்னும் பெருமையைப் பெறக் கூடும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஒன்ராறியோவின் Timmins மற்றும் Sudbury நகரங்களுக் கிடையே இந்தப் புதிய தங்கச் சுரங்கம் திறக்கப் பட்டுள்ளது. இந்த சுரங்கத்தின் சிறப்பம் சங்களில் ஒன்று என்னவென்றால், இந்தச் சுரங்கத்தில் தானியங்கி ட்ரக்குகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்தத் திட்டம் எதிர்பார்த்த விளைவைக் கொடுக் கும் நிலையில், இந்தச் சுரங்கம் கனடாவின் மிகப்பெரிய சுரங்கம் என்ற பெருமையைப் பெறக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இன்னொரு விடயம், இது தங்கச் சுரங்கமானாலும், சுரங்கத்தில் தங்கத் தாதுவை வெட்டி எடுக்கும்போது. அதனு டன் வெள்ளித்தாதுவும் கிடைக்கும் என்பதால், தங்க மும் வெள்ளியும் இந்தச் சுரங்கத்திலிருந்து கிடைக்கும். ஆகவே, இதை ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்றும் கூறலாம்.



# மருத்துவமனைக்கு நிதியளிப்பதான உறுதிமொழியை நிறைவேற்றுங்கள்

## பழங்குடித் தலைவர்கள் மத்திய அரசுக்கு வற்புறுத்து

ஒன்ராரியோ, மே 28

ஒன்டாரியோவின் ஜேம்ஸ் பே கடற் கரையோரம் உள்ள மூசோனியில் ஒரு புதிய மருத்துவமனைக்கு நிதிய ளிக்கும் உறுதிமொழியைப் பின்பற்று மாறு பழங்குடித் தலைவர்கள் மத்திய அரசாங் கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

மருத்துவமனையை கட்டுவதற்கு 1.3 பில்லியன் டொலர்களை ஒதுக்குவ தாக மத்திய அரசு உறுதியளித்ததாகவும், ஆனால் அந்த பணம் மத்திய அரசாங் கத்தின் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த நிதியுதவி கனடாவின் பழமையான, மூஸ் ஃபேக்டரியின் 74 வருட பழமையான கட்டடத்தை மருத்துவ மனையாக மாற்றும்.

'இது ஒரு கட்டடம் மட்டுமல்ல, நீடித்த காலனித்துவ பாரம்பரியத்தின் சின்னம். இதனை எங்கள் மக்கள் தினசரி எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ள னர்' என்று பிராந்தியத்தில் சுகாதார சேவைகளை நடத்தும் வீனிபேகோ பகுதி சுகாதார ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி லின் இன்னஸ் தெரிவித்துள்ளார்.




# போதைப் பொருள்,சட்ட விரோத துப்பாக்கிகள் வைத்திருந்த நால்வர் மீது 500 குற்றச்சாட்டுகள்!

ஒன்ராரியோ, மே 28

ஒன்ராரியோ தியெண்டினாகாவில் உள்ள ஒரு வீட்டில் பொலிஸார் நடத்திய சோதனையில் போதைப்பொருள் மற்றும் பல்வேறு துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவத்தில், நான்கு பேர் மீது 500 க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கைத்துப்பாக்கிகள் மற்றும் நீளமான துப்பாக்கிகள் உட்பட கிட்டத்தட்ட 100 துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன என ஒன்ராறியோ மாகாண பொலிஸார் கூறுகின்றனர். அவற்றில் சில திருடப் பட்டன எனவும், அவற்றில் பல இறக்குமதி செய்யப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிசையாக துப்பாக்கிகள், துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் ஒரு கான்கிரீட் தரையிலும், பழைய மெத்தை போல் தோன்றிய பகுதியிலும் பரவி வைக்கப்பட்டிருப்பதை பொலிஸாரால் பகிரப்பட்ட படங்கள் காட்டுகின்றன.

ஒரு வாகனத்தின் கையுறை பெட்டியில் ரிவால்வரைக் காட்டும் படமும் உள் ளது.

சுமார் 200 கிராம் சந்தேகத்திற்கிடமான கொக்கெய்ன், ஒரு கிலோகிராம் மெத்தம்பேட்டமைன் மற்றும் 2,000 கிராம் சந்தேகத்திற்குரிய MDMA ரக போதைப் பொருள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன என ஒன்ராறியோ மாகாண பொலிஸாரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# மனைவி, 4 குழந்தைகள் மற்றும் நண்பர் என அறுவரை இழந்தவரை ஆற்றுப்படுத்த மரதன்!

## பாதிக்கப்பட்ட தனஷ்க விக்கிரமசிங்க பங்குபற்றினார்

ஒன்ராரியோ, மே 28

ஒட்டாவாவை உலுக்கிய படுகொலைச் சம்பவத்தில் தனது குடும்பத்தையும், நண்பரையும் இழந்து, தப்பிப் பிழைத்த தனஷ்க விக்கிரமசிங்க கடந்த வார இறுதியில் ஒட்டாவாவில் இடம்பெற்ற மரதன் போட்டியில் கலந்துகொண் டார்.

தனித்துப் போய் துக்கத்தில் மூழ்கியிருக்கும் இருக்கும் குடும்பத் தலைவரான தனுஷ்க விக்கிரமசிங்கவிற்கு நிதி திரட்டுவதற்காக இடம்பெற்ற மரதன் போட்டியில் மேயர் மார்க் சட்க்ளிஃப் கலந்து கொண்டார்.

'நான் உண்மையில், என் இதயத்தின் அடிப்பகுதியில் இருந்து, உண்மையில் ஒட்டாவா மேயருக்கு மட்டுமல்ல, ஆனால், அனைவருக்கும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர்கள் எனக்கு மிகவும் உதவி செய்கிறார்கள், எனவே நன்றி.' என தனுஷ்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மார்ச் 6 அன்று, விக்கிரமசிங்கவின் மனைவியும் நான்கு குழந்தைகளும், ஒரு குடும்ப நண்பரும் அவர்களது பார்ஹேவன் இல்லத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமையுடன், விக்கிரமசிங்க கடும் காயங்களுக்கு உள்ளானார்.

இந்த கொலைச்சம்பவம் தொடர்பில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்த 19 வயது இளைஞன் மீது ஆறு முதல் தர கொலைக் குற்றச்சாட்டுகளும் மற்றும் ஒரு கொலை முயற்சிக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளன.



# மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு புதிய செயற்கை நுண்ணறிவு உத்தி

ஒன்ராரியோ, மே 28

மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு புதிய செயற்கை நுண்ணறிவு உத்தியை உருவாக்கி வருவதாக திறைசேரியின் தலைவர் அனிதா ஆனந்த் தெரிவித் துள்ளார்.

'செயற்கை நுண்ணறிவுக்கான ஒருங்கிணைந்த மற்றும் நிலையான மத்திய அரசாங்கத்தின் அணுகு முறைக்கு இது ஒரு பெரிய படியாகும்' என்று ஆனந்த் குறிப்பிட்டுள்ளார்.

அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான திறனை மேம்படுத்தும் அதே வேளை யில், கனேடியர்களுக்கான சேவைகளை மேம்படுத்துவதும், அரசாங்க செயல் பாடுகளை மிகவும் திறமையாக்குவதும் நோக்கமாகும் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

'அதிக செயல்திறனை எவ்வாறு சேர்ப்பது, ஆனால் அதேசமயம், கனே டிய மக்கள் மற்றும் நிறுவனங்கள் மற் றும் வணிகங்களின் மத்திய அரசாங் கத்தின் சேவைகளின் தொடர்புகளை எளிமையாக்குவது எப்படி' என்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித் துள்ளார்.

வழக்கமான பணிகளை தானியக்க மாக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தப்படலாம் என்று ஆனந்த் குறிப்பிட்டுள்ளார்.



# கனேடியர்களின் பாலஸ்தீன உறவுகளை மீளிணைப்பதற்கு அனுமதிகள் அதிகரிப்பு

ஒன்ராரியோ, மே 28

பலஸ்தீனியர்களை கனேடிய உற வினர்களுடன் மீண்டும் இணைப்ப தற்கான திட்டத்தின் கீழ் செயல்படுத் தப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக் கையை அதிகரிப்பதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் அறிவித் துள்ளார்.

காசா பகுதி மற்றும் சூடானில் உள்ள மோதல் வலயங்களில் இருந்து கனே டியர்களின் உறவினர்களை பாது காப்பிற்கு அழைத்து வரும் வகையில், சில மாதங்களுக்கு முன்பு அறிமுகப் படுத்தப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். காசா திட்டத்தில் ஆரம்பத்தில் 1,000 விண் ணப்பங்கள் 'செயலாக்கத்தில் ஏற்றுக் கொள்ளப்படலாம்' என்று இருந்தது, ஆனால் மில்லர் இப்போது அந்த எண் ணிக்கையை 5,000 ஆக உயர்த்தியுள்ளார்.



# கூடாரம் அமைத்துப் போராடுவோர்களுக்கு நீதிமன்றம் கட்டுப்பாட்டு விதிமுறை விதிப்பு

## கியூபெக் பல்கலை தொடர்பில்

கியூபெக், மே 28

இந்த மாத தொடக்கத்தில் கியூபெக் பல்கலைக்கழக வளாகத்தில் முகாம்கள் அமைத்த பலஸ்தீன ஆதரவாளர்களுக்கு எதிராக ஒரு பகுதி தடை உத்தரவை நீதிபதி வழங்கியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதிபதி லூயிஸ் ஜே. கோயின் இந்த பகுதியளவு தடையுத்தரவு தீர்ப்பினை அளித்தார்.

முகாமில் பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும், அவ்வாறு செய்வது முகாம் உறுப்பினர்களின் எதிர்ப்பு உரிமையை மீறாது என நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

'ஒரு துரதிரஷ்டவசமான நிகழ்வு நடப்பதைத் தடுக்கவும், பல்கலைக்கத்திற்கு தீவிரமான அல்லது சீர்படுத்த முடியாத தீங்கு விளைவிப்பதைத் தடுக்கவும் உடனடியாக பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்' என்று கோயின் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கதவுகள், ஜன்னல்கள் மற்றும் சுவர்கள் தடைகள் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கனடாவின் நான்கு பல்கலைகளில் யூத விரோதம் பெரும் பிரச்சினை!

ஒன்ராரியோ, மே 28

நான்கு பல்கலைக்கழக தலைவர்கள் தமது பல்கலைக்கழக வளாகங்களில் யூத விரோதம் ஒரு பிரச்சினையாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

டொராண்டோ பல்கலைக்கழகம், மெக்கில் பல்கலைக்கழகம், கொன்கார்டியா பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் தலைவர்களிடம் அவர்களின் நடத்தை நெறிமுறைகள், பாலஸ்தீனிய ஆதரவு முகாம்களுக்கான பதில்கள் மற்றும் யூத மாணவர்கள் சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய முயற்சிகளில் சேர்க்கும் முயற்சிகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

லிபரல் எம்.பி அந்தோனி ஹவுஸ்ஃபாதர் அவர்கள் நான்கு பேரிடமும் யூத எதிர்ப்பு என்பது அவர்களின் வளாகங்களில் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சனையா என்று கேட்டபோது, அவர்கள் அனைவரும் அதனைப் ஒப்புக்கொண்டனர்.




டொராண்டோ பல்கலைக்கழகத்தின் தலைவர் மெரிக் கெர்ட்லர், யூதஎதிரப்பினை எதிர்த்துப் போராடுவதற்கு 'விரிவான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட' முயற்சிகள் உள்ளன என்றார்.

இஸ்ரேல்–ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து யூத வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறை அதிகரிப்பு குறித்து யூதத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கவலை தெரிவித்து வரும் நிலையில், நாடாளுமன்றத்தில் பல்கலைக்கழகத் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் வெளிவந்துள்ளன.